பி. ப. 2-00 களைப் பார்க்க முடியாது என்று மறுத்துவிட்டார்கள். மறுத்தது மட்டும் அல்ல, கொஞ்சங்கூட இரக்கம் காட்டாமல் "மாணவர்கள் வேலைநிறுத்தம்தானே செய்வார்கள், நான் பள்ளிகளை இழுத்து மூடிவிடுகிறேன்" என்றார்கள். இதைக் காங்கிரஸ் நண்பர்கள் உணரா விட்டாலும் மாணவர் உலகம் தெளிவாக உணர்ந்து ஏற்றுக்கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் மாணவர்களை அழைத்து அவர்களுடைய பிரச்சினைகள் என்ன குறைபாடுகள் என்ன என்பதை விசாரித்து தெளிந்தே செயல்பட்டு வருகிறார்கள். இதே சட்டமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் மொழிபற்றிய தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது மாணவர்களுக்காகவா இதை நிறைவேற்றுவது என்று காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள். "ஆம் அவர்களுக்காகத்தான். அவர்கள் யார் நம் இரத்தத்தின் இரத்தம் அல்லவா" என்று கேட்டார்கள். மாணவர்களுடைய கோரிக்கையை இன்றைய தமிழக அரசுதான் நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பதை மாணவர்கள் நன்றாக அறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் கணேசன் அவர்கள் தொடர்ந்து 26—8—1968 அன்று பேசுவார்கள். பேரவையை ஒத்தி வைக்கும் முன் ஓர் அறிவிப்பு.

8. அறிவிப்பு

அவை அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று 24—8—1968 அன்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி இந்த அவையின் அலுவல்கள் கீழ்க்கண்டபடி நடக்கும்:—

25— 8—1968	ஞாயிறு	விடுமுறை.
26— 8—1968	திங்கள் முற்பகல்.	நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின் மீது விவாதம்.
	பிற்பகல்	அரசினர் மசோதாக்கள், தீர்மானங்கள்.
27— 8—1968	செவ்வாய்	விடுமுறை
28— 8—1968	புதன் முற்பகல்	நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின் மீது விவாதம்.
	பிற்பகல்— (4 மணி)	கடைசி நாள்.
29— 8—1968	வியாழன்	தனியார் அலுவல்கள்.
30— 8—1968 } 31— 8—1968	வெள்ளி சனி	மின்சாரவாரியத்தின் 1968–69-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம்.

பி.ப. 2-04 இப்பேரவையின் கூட்டம் 31—8—1968-ஆம் நாளுடன் முடிவுறும்.

இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீட்டும் 26—8—1968 அன்று காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.